

# ஆயத்தமாக இருங்கள்!

## மின் தடைப்படும் காலத்தில் என்ன செய்ய வேண்டும்.

1. மின் இணைப்புக்கள் விழுந்து விட்டால் உடனடியாக அதனை அறிவிக்கவும். அதன் அருகிற் செல்லாமற் தூ ரத்தில் நிற்கவும்
2. தடைப்பாடுகளை **416.542.8000** என்ற எண்ணுக்கு அறிவிக்கவும்

மின்சாரத் தடைப்பாடுகள் அதிக நேரம் நீடிப்பதில்லை. எனினும் இது ஏற்பட்டால் செய்ய வேண்டிய அவசரகாலத் திட்டமொன்றை ஒவ்வொரு வீட்டினரும் வைத்திருத்தல் அவசியம். எப்படி முதலிலேயே திட்டமிடுதல், நிகழ்வுகளை உடனுக்குடன் எப்படி அறிதல், தடைப்படும் காலத்தில் பாதுகாப்பாக இருத்தல் எப்படி என்பவை இங்கே கூறப்படுகின்றன.

## இந்தச் சரிபார்க்கும் பட்டியலின் உதவியுடன் முதலிலேயே திட்டமிடுங்கள்.

- ☑ கீழேயுள்ள எங்கள் அவசரகால ஆயத்த வழிகாட்டியை அச்சிலிட்டு வைத்திருங்கள் **torontohydro.com/emergencykit**
- ☑ 72 மணித்தியாலத்துக்குத் தேவையான அவசரகால பொதி ஒன்றைத் தயாரியுங்கள்
  1. போத்தல் தண்ணீர் (ஒரு நாளுக்கு ஒருவருக்கு 3 லிற்றர்)
  2. இலகுவிற் பழுதடையாத, சமைக்காமல் உண்ணக் கூடிய உணவு, ரின் கட்டர், எறிந்துவிடக் கூடிய தட்டுக்கள், பாத்திரங்கள்
  3. மெழுகுதிரி, தீப்பெட்டி, லைற்றர்கள், ரோச்லைற், புதிய பற்றறிகள
  4. வைன்டப் அல்லது பற்றறியில் இயங்கும் றேடியோ, புதிய பற்றறிகள்
  5. முதலுதவிப் பெட்டி

  முழுப்பட்டியலையும் **torontohydro.com/emergencykit** ல் பார்க்கவும்
- ☑ உடனுக்குடன் நிகழ்வுகள் பற்றி அறிந்து கொள்ளுங்கள் — உள்ஊர் ஊடகப் செய்திகளைக் கேளுங்கள். எங்களை டுவிற்றரில் தொடரந்து. வாருங்கள். **@TorontoHydro.**
- ☑ உங்களது கைத் தொலை பேசிகளை மின்ஊட்டி வையுங்கள் — புயல் வந்து கொண்டிருந்தால் சகல சாதனங்களையும் மின் ஊட்டியும், அவசரகாலத் தொடர்புகளைப் புதுப்பித்தும் வைத்துக் கொள்ளுங்கள்

## முக்கிய பாதுகாப்பு ஆலோசனைகள்

- மின் எழுச்சி ஏற்படும் பட்சத்தில் சூடேற்றியை நிற்பாட்டுங்கள். மின்சாதனங்களைக் கழட்டி விடுங்கள்
- வெள்ளம் நிற்கும் நிலக் கீழ் அறை போன்ற ஈரமான பிரதேசத்துள் இருக்கும் மின்சார உபகரணத்துக்கு அருகிற் செல்லாதீர்கள்.
- ஒரு பொழுதிலும், ஏற்றிய மெழுகுதிரியைத் தனியே விட்டு செல்லாதீர்கள
- ஒருநாளும் பாபக்யு, புறொபேன், எடுத்துச் செல்லக் கூடிய ஜெனறேற்றர்கள் போன்றவற்றை வீட்டுள் பயன்படுத்தாதீர்கள்
- உங்களது குளிர்சாதனப்பெட்டி, பிறீஸ ர் ஆகியவற்றைத் திறக்காதீர்கள். இவை மூடப்பட்டி ருந்தால், பொதுவாக 24 முதல் 48 மணிவரை உணவுகள் பழுதடையமாட்டா. உணவு பழுதடைந்து விட்டதென நீங்கள் சந்தேகப்பட்டால் அதனை எறிந்து விடுங்கள்.
- உங்களது குடும்பத்தினர்,நண்பர்கள்,அயலவர்கள் ஆகியோர் என்ன செய்கின்றார்களென அறிந்து கொள்ளுங்கள்.
- மேலதிக பாதுகாப்பு ஆலோசனைகளுக்கு **torontohydro.com/safety** என்ற இணைய தளத்திற்குச் செல்லுங்கள்.

எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

TORONTO HYDRO®

## குடும்பத்தின் அவசரகாலத் தேவைக்கான துரித நடவடிக்கைப் படிவம்

உங்கள் குடும்பத்தின் அவசரகாலத் தேவைத் திட்ட விபரங்களைக் கீழே பதிவு செய்யுங்கள். பின்னர் இந்தத் தாளை நீங்கள் இலகுவாக எடுக்கக் கூடிய இடத்தில் வைத்தால் நீங்கள் அடுத்த புயலுக்கு ஆயத்தமாக இருப்பீர்கள்

அவசரகாலச் சந்திப்பு இடம் (வீட்டிற்கு வெளியில்)
இடம்: ______________________________

அவசரகாலத்தில் ஏற்படுத்தக் கூடிய உள் ஊர்த் தொடர்பு:
பெயர்: ______________________________
வீட்டுத் தொலை பேசி இலக்கம்: ______________________________
கைத் தொலை பேசி இலக்கம்: ______________________________
வீட்டு விலாசம்: ______________________________
தொழில் செய்யுமிடத்தின் தொலை பேசி இலக்கம்: ______________

வெளியிடத் தொடர்பு
பெயர: ______________________________
வீட்டுத் தொலை பேசி: ______________________________
கைத் தொலை பேசி: ______________________________
வீட்டு விலாசம்: ______________________________
வேலைத்தளத் தொ.பே. இலக்கம்: ______________________________

குடும்ப வைத்தியர்:
வைத்தியரின் பெயர்: ______________________________
வைத்தியரின் தொ. பே. இலக்கம்: ______________________________
மருந்துச் சீட்டு: ______________________________
______________________________

ஒவ்வாமை, விசேட தேவைகள்: ______________________________

பாடசாலைகள் – கொம்பனி:
பெயர்: ______________________________
தொலை பேசி இலக்கம்: ______________________________

இன்சூரன்ஸ் ஏஜன்சி – கொம்பனி:
கொம்பனியின் பெயர்: ______________________________
தொலை பேசி இலக்கம்: ______________________________
வீட்டுப் பொலிசியின் நம்பர: ______________________________
வாகனத்தின் பொலிசி நம்பர்: ______________________________
______________________________

### கடுமையான கால நிலை வந்துகொண்டு இருக்கின்றதா?

1. அவசியமற்ற மின் உபகரணங் களைச் செருகியிலிருந்து கழட்டி விடுங்கள்.
2. உங்களுக்கு வைத்தியர் தந்த மருந்துகளை வாங்கிவையுங்கள
3. யன்னல்கள், கதவுகள், வீட் டிற்கு வெளியில் வைக்கும் தளபாடங்கள், கருவிகள் யாவ ற்றையும் பாதுகாப்பாக வையுங்கள்.
4. நீங்கள் அவசரமாகவெளியேற நேரந்தால் என்பதற்காக,உங்கள் வாகனத்தின் பெற்ரோல்ராங்கை நிரப்பி வையுங்கள்.
5. உங்கள் வாகனத்தை இயலு மான வரையிற் பாதுகாப்பான ஒரு இடத்தில் நிற்பாட்டி வையுங்கள்

### உங்களது வாழ்வாதார உப கரணங்கள் பற்றி எங்களு க்கு அறிவித்தல்

மின் சக்தியால் இயங்குகின்ற மருத்துவ உபகரணங்களான வென்ரிலேற்றர், சிறு நீரக டயலிஸிஸ் மெசீன் போன்றவற்றிற் தங்கியிருப் பவராக நீங்கள் இருந்தால், திட்டமிட்ட மின்தடைகளைப் பற்றி உங்களுக்கு முதலிலேயே நாங்கள் அறிவிப்பதற்காகத், தயவு செய்து எங்களுடன் பதிவு செய்யுங்கள்.

அழையுங்கள் **416.542.8000**

® என்பது Toronto Hydro Corporation வின் பதிவு செய்யப்பட்ட வர்த்தகச் சின்னம். இது லைசன்ஸ் பெற்று இயங்குவதாகும்.
"Toronto Hydro" என்பதின் அர்த்தம் Toronto Hydro-Electric System Limited. என்பதாகும்